## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**O.S.No.2/2015 (OS/30/2022)**

DW1– ஜீனா நாள்– 21.03.2025

**4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என் அப்பாவின் பூர்வீகம் சத்திரமனைவேலூர். என் அப்பா சத்திரமனைவேலூரிலிருந்து புலம்பெயர்ந்து பெரம்பலூர் வந்தார் என்றால் சரிதான். என் அப்பா வேலூரிலிருந்து பெரம்பலூர் வந்தபோது நான் பிறந்தேனா என்று தெரியவில்லை. என் குடும்பத்தில் எ்ல்லோரும் பட்டப்படிப்பு படித்திருக்கிறோம். என்னை கல்லூரியில் படிக்க வைத்தது என் பெரியப்பாவும், என் சித்தியும். என் பெரியப்பாவிற்கு குழந்தைகள் உண்டு. அவருக்கு 8 பிள்ளைகள். என் பெரியப்பா Deputy Director of Industries and Commerce ஆக இருந்தார். என் சகோதரர்களை கல்லூரி நான் தான் படிக்க வைத்தேன். நான் 30 வயதில் வேலைக்கு போனேன். என்னுடைய மூத்த சகோதரர் என்னைவிட இரண்டு வயது இளையவர். 1971–ல் என் அப்பா துறையூரில் வழக்கு நடத்தியபோது எனக்கு 12 வயது. நான் 1958ல் பிறந்தேன். 4ம்பிரதிவாதி தாக்கல் எதிர்வழக்குரையும், ஆவணங்களை படித்து பார்த்தேனா என்று ஞாபகமில்லை. மற்ற பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையும், ஆவணங்களை படித்து பார்த்தேனா என்று ஞாபகமில்லை. பிரதிவாதிகளின் கட்சி தெரியாமலேயே நான் சாட்சியம்அளிக்கிறேனா என்றால் என் வக்கீல் தான் எல்லாமே பார்த்து கொள்கிறார். நான் எம்.எல் படித்துள்ளேன். என் அப்பா பிரதிவாதியாக துறையூரில் வழக்கு நடத்திய விவரங்கள் எனக்கு தெரியாது. முடிவில் சமாதானம் ஆகி ஆளுக்கு பாதியாக பிரித்துக்கொண்டது தான் தெரியும். அந்த வழக்கின் இறுதிநிலை தீர்ப்பாணையை நான் பார்க்கவில்லை. அந்த வழக்கில் கண்ட சர்வே எண்.422/7 என்ற நிலம் தான் இந்த வழக்கில் கண்ட 1, 2, 3, 8 முதல் 12 அயிட்ட சொத்துக்கள் என்றான் சரிதான். துறையூர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட இறுதிநிலை தீர்ப்பாணையின் படி ஏக்கர் 1.11 1/2 சொத்து என் அப்பாவுக்கும், பெரியப்பாவுக்கும், சித்தப்பாவுக்கும் ஒதுக்கினார்கள்

என்றும் என் பாட்டிக்கு ஒதுக்கவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. இறுதிநிலை தீர்ப்பாணைக்கு பிறகு என் பெரியப்பாவும், சித்தப்பாவும் வாய்மொழியாக அவர்களது பங்கை என் அப்பாவுக்கு விட்டுக்கொடுத்துவிட்டார்கள் என்றால் அதற்கு என் அப்பா பணம் கொடுத்தார். எவ்வளவு கொடுத்தார் என்று நினைவில்லை. அவர் தொகை கொடுத்தது பற்றி எந்த காலக்கட்டத்தில் என்னிடம் சொன்னார் என்று ஞாபகமில்லை. என் அப்பாவுக்கு 1. 11 1/2 ஏக்கர் பாத்தியம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அதன்பிறகு என் அப்பா தங்கராஜிக்கு கிரையம் கொடுத்துள்ளார். அது பி.வா.சா.ஆ.1 ஆகும். அந்த ஆவணத்தை என் அப்பாவும் அவரது மைனர் ஆண்பிள்ளைகளும் தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். என் அப்பா மனோகரனுக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அந்த ஆவணத்தில் என் அப்பாவும் அவரது மைனர் ஆண்பிள்ளைகளும் தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஆவணங்களிலும் என்னையோ மற்ற பெண் பிள்ளைகளையோ காட்டி எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எனது அப்பாவும் அவரது ஆண்பிள்ளைகளும் கூட்டுகுடும்பமாக இருந்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். நாங்களும் தான் சேர்ந்து இருந்தோம். என் அப்பாவும் ஆண்பிள்ளைகளும் சேர்ந்து 28.08.1981 ல் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். மேற்படி கிரைய பத்திரத்தை என் அப்பா 15.11.1990ல் ரத்து செய்தார் என்றால் சரிதான். மேற்படி ரத்து பத்திரத்தை நான் படித்ததில்லை. 2 முதல் 5 நபர்கள் ஆட்சேபித்ததன் பேரில் ரத்து செய்ததாக அந்த பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் அது தவறு. 1 முதல் 3 மற்றும் 8 முதல் 12 அயிட்ட சொத்துக்கள் என் அப்பாவுக்கும்அவரது ஆண்பிள்ளைகளுக்கும் மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விவரம் ரத்து பத்திரத்தில் தெளிவாக தெரியும் என்றால் சரியல்ல. 1 முதல் 3 மற்றும் 8 முதல் 12 அயிட்ட சொத்துக்களில் எனக்கோ என் சகோதரிகளுக்கோ

எந்த வித பங்கும் இல்லை என்றால் சரியல்ல. நான் 1989ல் சென்னையில் பணியில் சேர்ந்தேன். சென்னையில் 4 வருடங்களாக பணிபுரிந்தேன். அதன் பிறகு திருச்சியில் வேலை பார்த்தேன். 2004-ல் நான் மதுரைக்கு வேலைக்கு போனேன். மதுரையில் ஒரு வருடம் வேலை பார்த்தேன். என் திருமணம் பெற்றோர்கள் பார்த்து வைத்த திருமணம்தான். திருமண பத்திரிக்கை அடித்தார்கள் அது உள்ளதா என்று தெரியவில்லை. என் கணவர் ஏற்கனவே திருமணமானவர். அவர் வேறு சமூகத்தை சேர்ந்தவர். முதல் மனைவி பெயர் தனலெட்சுமி. அவரிடமிருந்து என் கணவர் சட்டப்படி விவாகரத்து வாங்கவில்லை. முதல் மனைவி இப்போதும் உயிருடன் இருக்கிறார். என் அப்பா முதல் மனைவி இருக்கும்போதே நான் திருமணம் செய்து கொண்டதால் என்னை குடும்பத்தை விட்டு விலக்கிவிட்டார் என்றால் சரியல்ல. நான் 1 வதுஅயிட்ட சொத்தை பொருத்து எதிரிடை பாத்தியம்கேட்கிறேன் என்றால் சரிதான். 1990 முதல் நான் எதிரிடை பாத்தியத்தில் இருப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். மாதம்,தேதி ஞாபகமில்லை. குறிப்பாக நான் எதிரிடை அனுபவத்திற்கு வந்தது எப்போது அவர்களுக்கு தெரியும் என்று எனக்கு தெரியாது. 1வது அயிட்ட சொத்தை பொருத்து எதிரிடை பாத்தியம் கோரும் காலத்தில் நான் சென்னையில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான்அரசு பணியில் இருந்ததால் 1வதுஅயிட்ட சொத்தை பொருத்து எதிரிடை பாத்தியம் கோருவது சட்டவிரோதம் என்றால் சரியல்ல. நான் என் தந்தைக்கு எதிராக எதிரிடை அனுபவம் கேட்கவில்லை. 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராகவும் நான் எதிரிடை அனுபவம் கோர முடியாது என்றால் சரியல்ல. என் அப்பா எனக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுத்த 40 அடிக்கு 40 அடி செட்டில் மெண்ட் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. கூட்டுஉரிமையாளர்களான 2 முதல் 5 பிரதிவாதிகளின் சம்மதமின்றி எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைக்க என் அப்பாவுக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. தாவா 1 வது அயிட்ட சொத்தில் 4 கடைகள் கட்டியதற்க அப்ரூவல்

வாங்கியுள்ளேன் அதை தாக்கல் செய்யவில்லை. 1 வதுஅயிட்ட சொத்தை பொருத்து நான் தாக்கல் செய்துள்ள சொத்துவரி ரசீது, மின்சார கட்டணம் ரசீது ஆகியவை சொத்துரிமையை ஏற்படுத்தாது என்றால் சரியல்ல. என் அம்மா வேலைக்கு போகவில்லை. தங்கராஜ், மனோகரனுக்கு என் தந்தை விற்ற சொத்துக்களை என் தாயார் பெயருக்கு என்தந்தை தான் வாங்கினார் என்றால் சரியல்ல. என் அம்மா கடன் வாங்கி தான் சொத்து வாங்கினார். யாரிடம் கடன் வாங்கினார் என்று நினைவில்லை. எவ்வளவு கடன் வாங்கினார் என்று நினைவில்லை. என் அம்மா கடன் வாங்கியதற்கு ஆவணம் உள்ளதா என்று நினைவில்லை. என் அம்மாவிற்கு எந்த வருமானமும் இல்லை என்றும், என் அப்பா தான் என் அம்மா பெயரில் சொத்து வாங்கினார் என்றால் என் அம்மா அப்பா இருவருக்கும் எந்த வித வருமானமும்இல்லை. நான் தான் பணம் கொடுத்து உதவினேன். நான் தான் கடனை அடைத்தேன். நான் பணத்தை என் அம்மாவிடம் கொடுத்தேன். எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று தெரியாது. என் அம்மாவும் என் சகோதரர்களும் சேர்ந்து பாகப்பிரிவினை பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். எனக்கு பின்னால் பாகம் கொடுப்பதாக சொல்லி தான் பாகப்பத்திரம் செய்தார்கள் ஆனால் எனக்கு பாகம் கொடுக்கவில்லை. அந்த பாகப்பத்திரம் தவறானது. அதனால் தான் வழக்கு போட்டேன். பாகப்பத்திரத்தை ஏற்றுக்கொண்டுதான் என் அம்மாவிடம் செட்டில்மெண்ட் வாங்கினேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 அந்த பாகப்பத்திரம் ஆகும். பி.வா.சா.ஆ-3 03.11.2003 தேதியிட்ட கிரையம். அந்த கிரையம் மனோகரிடமிருந்து வாங்கிய சொத்து தான். மனோகரிடமிருந்து என் அம்மா வாங்கியது 1800 சதுரடி. என் அம்மா ராமகிருஷ்ணனிடமிருந்து கிரையம் பெற்று அதையும் சேர்த்து 5257சதுரடிகள் எழுதிக்கொடுத்துள்ளார். என் அம்மா ராமகிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தின் நகல் என் கைவசம் இல்லை. அந்த பத்திரம் பதிவு செய்யப்படாத பத்திரம். அந்த பத்திரம் இருக்கிறதா என்று தேடிப்பார்க்கிறேன். அதுபோல பத்திரம் இருந்தால் அது மோசடியானது

என்றால் சரியல்ல. 4வது அயிட்ட சொத்தை பொருத்து எதிரிடை பாத்தியம் கோருகிறேன். அது என் தந்தைக்கு எதிராக கேட்கிறேன் என்றால் சரிதான். 1990லிருந்து கேட்கிறேன். நான் அரசு வேலையில் இருந்ததால் எதிரிடை பாத்தியம் கோர முடியாது என்றால் சரியல்ல. 5, 6, 7 அயிட்ட சொத்துக்கள் என் அப்பா கிரைய வாங்கி அதை கூட்டுகுடும்ப சொத்தாக மாற்றி ஆண்பிள்ளைகளோடு மட்டுமே அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. அதில் பெண்பிள்ளைகளுக்கு பங்கில்லை என்றால் சரியல்ல. நான் என்அப்பா அம்மாவை தன்வசப்படுத்தி செல்வாக்கை பயன்படுத்தி என் சகோதரர்களையும் தன்வசப்படுத்தி வழக்கு சொத்துக்களை பொருத்து போலி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் அப்பாவும் அம்மாவும் சொத்துக்களை எழுதிக்கொடுத்ததற்கு காரணம் நான் என் சம்பளம் முழுவதையும் என் அப்பா அம்மாவிடம் கொடுத்து என் தம்பிகளையும் ஆளாக்கினேன். இந்த காரணம் செட்டில்மெண்ட் பத்திரத்தில் துலங்காது என்றால் சரியல்ல.

**<u>5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

4ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.